## பெற்றோர்களுக்கான தகவல் தாள்
## ஒன்றின் மாதிரி

(தேவைக்கேற்றபடி தழுவலுக்காக மாதிரி தரப்பட்டுள்ளது)

அன்புள்ள பெற்றோர்களே,

நாட்டு மொழிக் கல்வி நிகழ்வின் ஒரு பகுதியாக, நாம் ஒரு பயிற்சித் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளோம். இது வெற்றிகரமான கற்றலுக்கு முன்தேவைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துதற்காக வடிவமைக்கப்பட்டது. இம் முன்தேவைகள் பள்ளியில் உங்கள் பிள்ளையின் வெற்றிக்கு மிக இன்றியமையாதனவாகும். பெற்றோர்கள் என்ற முறையில், முடியுமாயின், உங்கள் பிள்ளை, இத் தேவைகளை நிறைவேற்ற நீங்கள் துணைசெய்ய முயற்சிக்கவேண்டும். நிகழ்வு பத்துப் படிகளைக் கொண்டுள்ளது. திட்டத்தின் சுருக்கம் நகல்செய்யப்பட்ட ஒரு சிறிய நூலாக உங்கள் பிள்ளை பெற்றுக்கொள்ளும். படிகள் ஏனைய பலவற்றுள், கோடிட்டுக் காட்டுவன: பணியிடம் ஒன்றினை அமைப்பதின் இன்றியமையாமை, நிலையான வேலை நேரங்கள் மற்றும் முன்கூட்டியே ஒருவரின் வேலையைத் திட்டமிடல் ஆகியவற்றைப் பேணுவதின் இன்றியமையாமை. ஒவ்வொரு நாள் முடிவிலும் ஒரு சிறிய பயிற்சி இடம்பெறும். இத்திட்டம் 10 – 14 நாள் பணியுடன் முடிவடைய வேண்டும். உங்கள் பிள்ளைக்கான உங்கள் பக்கத்துணை மற்றும் இத்திட்டத்துடன் அவர் செய்யும் பணியில் காட்டும் ஆர்வம் அவர் திட்டத்தினூடாக உண்மையில் ஆற்றும் பணியையும் விடா முயற்சியையும் உறுதிப்படுத்துவதற்குப் பெருமளவு உதவும். உங்கள் பக்கத்துணை பெருமளவு நேரத்தை வேண்டுவதல்ல. ஒவ்வொரு நாளையும் உறுதிசெய்துகொண்டால் அது வெறுமனே 10-நாள் கொண்ட காலஅளவு ….

… உங்கள் பிள்ளை திட்டத்தினூடாகத் தொடர்ந்து பணி செய்து, தொடர்புடைய அடுத்த படியினையும் அதனுடன் தொடர்புள்ள பயிற்சிகளையும் நிறைவுசெய்வதுடன் அவற்றை விளங்கியும் கொள்வார்.

… ஒரு குறிப்பட்ட படியுடனான பணி நிறைவெய்தியதைத் தொடர்ந்து, பின்வரும் குறிப்புகள் தொடர்பாக உங்கள் பிள்ளையை ஒரு சிறிய உரையாடலில் ஈடுபடவையுங்கள்: அது எப்படி நடைபெற்றது? எல்லாம் தெளிவாக இருந்தனவா? நிறைவுசெய்த பயிற்சிகள் அல்லது அப் படியுடன் தொடர்புற்ற ஒப்படையை எனக்குக் காட்டவும்! (உங்கள் பிள்ளைக்கு இது தொடர்பாக உங்களிடமிருந்து இன்னும் சிறிது துணை தேவைப்படலாம்.)
இத்திட்டம் எங்கள் பாடங்களிலும் கலந்துரையாடப்படும் என்பது சொல்லத் தேவையில்லை. ஆனால் இது எந்த வகையிலும் உங்கள் உயர்நிலையான பக்கத்துணையை் ஈடுசெய்வதாக அமையாது.

உங்கள் ஆர்வத்துக்கும் இத்திட்டத்தினை மிக விழிப்புடன் நடத்துதற்கும் உங்கள் பக்கத் துணைக்கும் முன்கூட்டியே நன்றி கூறுகிறேன். உங்கள் பிள்ளையின் கல்விக்கான அணுகுமுறைக்கு மற்றும் மாணவர் வெற்றிக்கு உங்கள் பக்கத்துணை மதிப்பார்ந்த பங்களிப்பினை நல்கும் என்பதை உங்களுக்கு நான் உறுதிசெய்கிறேன்.

அன்புடன்,

## நூற்பட்டியல்


Endres, Wolfgang (2004): 111 starke Lerntipps. Sek 1. Weinheim/Basel: Beltz.
Endres, Wofgang et al. (2008): So macht Lernen Spaß. Praktische Lerntipps für Schülerinnen und Schüler. Weinheim/Basel: Beltz.
Hinnen, Hanna (2007): Ich lerne lernen. Lernstrategien und Lerntechniken (3.–5. Klasse). Zürich: Lehrmittelverlag des Kantons Zürich.
Hinnen, Hanna (2009): Lernen kennen lernen. Lernstrategien und Lerntechniken (6.–9. Klasse). Zürich: Lehrmittelverlag des Kantons Zürich.
Keller, Gustav (2011): Lerntechniken von A–Z. Infos, Übungen, Tipps. Bern: Huber.
Kruse,Gerd; Maria Riss et al. (2010, 2012, 2013): Lesen – Das Training. Unter-, Mittel-, Oberstufe; je Teil 3: Lesestrategien. Bern: Schulverlag plus
Mandl, Heinz; Helmut F. Friedrich (2006): Handbuch Lernstrategien. Göttingen: Hogrefe.
Schader, Basil (2013): Mein schlaues Lernheft. Zürich: Orell Füssli Verlag.
Steiner, Verena (2011): Lernpower. Effizienter, kompetenter und lustvoller lernen. München: Pendo.